**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி**
**OS. 27/2013 . நாள்.12.12.2024**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. நசீம் பேகம் அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சின்னசாமி | **வயது** | 74 |
| **த/பெ. க/பெ.** | வெங்கடப்ப நாயுடு | **மதம்** | |
| **முகவரி** | காட்டாகரம் | **தொழில்** | விவசாயம் |

**<u>வா.சா.2 ஆஜர். சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் திரும்ப அழைக்கப்பட்டு 1 முதல் 3, 6,7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடரச்சி</u>**

முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதாகும். முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. 05.08.1950 ஆம் தேதிய அடமான பத்திரம் நான் தாக்கல் செய்யவில்லை. முத்துக்கவுண்டன் என் மீதும் என் தகப்பனார் மீதும் கிருஷ்ணகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.247/1960 தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். முத்துக்கவுண்டன் எங்கள் மீது அந்த ஒரு வழக்கு தான் தாக்கல் செய்துள்ளார். முத்துக்கவுண்டன் அடமானத்தை மீட்காத காரணத்தால் 27.12.1967 ஆம் தேதி போடியம்மாளுக்கும், அவரது மகன் முனியப்ப நாயுடுக்கும் விற்பனை செய்துவிட்டோம் என்று சொன்னால் பணம் செலுத்தாத காரணத்தால் விற்பனை செய்துவிட்டோம். போடியம்மாளுக்கும், முனியப்ப நாயுடுக்கும் அப்போது அனுபவம் சென்றுவிட்டது என்று சொன்னால் தற்போது வரை அவர்கள் சொத்திற்க்கு வரவில்லை. மேற்படி கிரையத்தின் அடிப்படையில் சகுந்தாலாவும், அவரது வாரிசுகளும் வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். நாங்கள் எப்போதும் அனுபவிக்கவில்லை என்றும், பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. 1967 வருடத்திற்க்கு பிறகு வழக்கு சொத்தை பொருத்து அனுபவிப்பதை காட்டுவதற்க்கு

எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யாத காரணத்தால் நாங்கள் வழக்கு சொத்தில் அனுபவத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்திற்க்கும்எங்களுக்கும், எவ்வித தொடர்பும் இல்லை என்றும், வழக்கு சொத்தை வாதிக்கு விற்றது தவறு என்றும் சொன்னால் சரியல்ல. போடியம்மாள் மற்றும் முனியப்ப நாயுடு ரூ.1000/— கட்டாததை நிருபிக்க எவ்வித ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அவர்கள் பணம் கட்டவில்லை. அவர்கள் பணம் கட்டாமல் இருந்திருந்தால் நாங்களும், முத்துகவுண்டரும் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுத்திருத்திருப்போம் என்றும், பணம் கட்டிய காரணத்தால் தான் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தானது எனக்கு சுயமாக பாத்தியப்பட்டது என தண்டபாணிக்கு விற்பனை செய்துள்ள நிலையில் அதற்க்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் எவ்வித மூல ஆவணமும் நானோ வாதியோ தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. முத்துக்கவுண்டருக்கு பணம் செலுத்திவிட்ட காரணத்தால் தான் அவர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நிலவுடமை மேம்பாட்டு திட்டத்திற்க்கு முன்பு வழக்கு சொத்தின் ஆவணங்கள் எனது பெயரிலோ, எனது தகப்பனார் பெயரிலோ அல்லது வகையறா பெயரிலோ இருந்தததற்க்கான பட்டா, சிட்டா மற்றும் வேறு உரிமை மூல ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. முத்துகவுண்டருக்கு ரூ.1000/— நான் செலுத்தியதற்க்கு ஆதரமாக எவ்வித ஆவணங்களும் நானோ வாதியோ தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது சகோதரர் மாரியப்பன் உயிருடன் தான் உள்ளார். நிலவுடமை மேம்பாட்டு திட்டத்திற்க்கு வழக்கு சொத்தை பொருத்து தவறுதலாக வழங்கப்பட்ட பட்டாவின் அடிப்படையில் வாதிக்கு கிரையம்மேற்கொண்டது செல்லாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் ஊர் அறிய நான் அனுபவத்தில் இருந்ததாக வழக்கிற்க்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் நான் எப்போதும் அனுபவத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1—ம் பிரதிவாதிக்கும் அவரது பிள்ளைகளுக்கும் படிப்பறிவு குறைவாக உள்ளதால் அதைப்

பயன்படுத்தி வழக்கு சொத்தை பொருத்து நானும், வாதியும் ஆவணங்களை உருவாக்கி அதை அபகரிக்க முயற்ச்சிக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. நான் மேற்கொண்ட கிரையம் செல்லாது என்றும் வாதி வழக்கு சொத்தில் அனுபவத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதற்க்கு இணங்க மோசடியாக ஆவணத்தை ஏற்படுத்தி அதற்க்கு ஏற்ப சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தானது பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு அவர்களது அனுபவத்தில் உள்ளது என்பதால் எவ்வித உரிமையும் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கும் எனுக்கும் தாவா சொத்தில் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

SHANMUGANATHAN

District Munsif cum
Judicial Magistrate
Digitally signed by
SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.